DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. -350/2025

Prosecution PW -7

| | | |
|---|---|---|
| Name | Senthilkumar | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 12.01.2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A3 to A5 present. Accused A1 absent. 355 BNSS petition filed and allowed. A2- Died

<u>முதல் விசாரணை</u>

நான் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.04.2023 ஆம் தேதி இரவு 8.37 மணிக்கு நான் மருத்துவப்பணியில் இருந்தபோது அப்புசாமி என்ற 65 வயதுடைய ஆண் நபரை மருத்துவசிகிச்சைக்காக அவருடைய மகன் பிரபு நாத் என்பவர் அழைத்து வந்தார். மேற்படி நபரை விசாரிக்க அவர் 24.08.2023 ஆம் தேதி இரவு 7.30 மணியளவில் விலாங்குடி ரோடு ஒயின்சாப் அருகே தன்னை அடையாளம் தெரிந்த ஆண் நபர் ஒருவர் தன்னை அரிவாளால் வெட்டியதாக தானே கூறினார். நான் அவரை பரிசோதனை செய்தபோது சுயநினைவுடன் காணப்பட்டார். இரத்தம் அழுத்தம், நாடித்துடிப்பு சாதாரணமாக இருந்தது. அவருக்கு வலது பக்கத்தலையில் கிழிந்த வெட்டுக்காயம் 6X1.5 செ.மீX தோல் வரை ஆழம் உடைய வெட்டுக்காயம் காணப்பட்டது. மேற்படி நபரை நான் முதலுதவி சிகிச்சை செய்து உள்நோயாளியாக அனுமதித்தேன். மேற்படி நபருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.**4**

அதே தினம் இரவு 8.42 மணிக்கு கிருபானந்தம் என்ற 69 வயதுடைய ஆண் நபரை சதிஷ் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். நான் மேற்படி நபரை விசாரித்தபோது அவர் 24.08.2023 ஆம் தேதி இரவு 7.30 மணியளவில் திருவையாறு விலாங்குடி மெயின்ரோடு பகுதியில் அடையாளம் தெரிந்த 6 ஆண் நபர்களால் அரிவாளால் தாக்கப்பட்டதாக தானே

கூறினார். மேற்படி நபரை நான் பரிசோதித்தபோது சுயநினைவுடன் காணப்பட்டார். இரத்தம் அழுத்தம், நாடித்துடிப்பு சாதாரணமாக இருந்தது. அவருக்கு

1.கிழிந்த காயம் 15X3 செ.மீX எலும்பு வரை ஆழம் உடைய முன்பக்க தலையில் இருந்து நடுத்தலை வரை காணப்பட்டது.

2. கிழிந்த காயம் 2X0.5 செ.மீX தசை அளவு ஆழம் வரை அவரது இடது மேல்கையில் காணப்பட்டது.

மேற்படி நபரை நான் முதலுதவி சிகிச்சை செய்து உள்நோயாளியாக அனுமதித்தேன். மேற்படி நபருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேடு அ**.**த**.**சா**.**ஆ**.5.** நீதிமன்றத்தில் உள்ள சா**.**பொ**.1** அரிவாளால் மேற்படி இரு நபருக்கும் ஏற்பட்டுள்ள காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

காயம் பட்ட அப்புசாமி சிகிச்சைக்கு வரும்போது சுயநினைவுடன் காணப்பட்டார். அப்புசாமிக்கு ஏற்பட்ட காயம் சுமார் 5 ல் இருந்து 20 நிமிடத்தில் இரத்தம் உறைதல் ஏற்படும் என்றால் சரிதான். காயத்தில் இருந்த இரத்தம் ஈரத்தன்மையாக இருந்ததா, உறைந்து இருந்ததா என்று விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை. அப்பு சாமிதான் தனக்கு ஏற்பட்ட காயத்தை குறித்து தானே கூறினார். காயம்பட்ட கிருபானந்தத்திற்கு ஏற்பட்ட காயத்தில் இருந்த இரத்தம் ஈரத்தன்மையாக இருந்ததா, உறைந்து இருந்ததா என்று விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை. கிருபானநத்திற்கு ஏற்பட்ட 2 வது காயம் வேகமாக ஒரு நபர் அரிவாளால் வெட்டும்போது கிழிந்த காயம் ஏற்படாது என்றாலும், வெட்டுக்காயம்தான் ஏற்படும் என்றால் அது ஆயுதத்தை பயன்படுத்தும் முறையை பொருத்தது. கிழிந்த காயம் என்பது வேறு, வெட்டுக்காயம் என்பது வேறு என்றால் வெட்டுக்காயம், கிழிந்த காயத்தின் ஒரு வகைதான்.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

(ஒ/ம்-G.சுந்தரராஜன், B.Sc.,B.L.,)
கூடுதல் மாவட்ட(ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்